செ.வெ.எண் : 11/மே நாள் : 04.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் கண்காணிப்புக் குழுவினர்களின் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம்

## இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், திரு.இரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள், ஆகியோர்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு செய்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.05.2016) நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.விக்டர் மிக்வான்,இ.ஆ.ப., அவர்கள், (பரமக்குடி, திருவாடானை) திரு.இரமேஷ்வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) ஆகியோர் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர்களின் பணிகளை ஆய்வு செய்தார்கள். மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கான தேர்தல் பொது பார்வையாளர்கள் தெரிவித்ததாவது:-

இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி, இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற மே 16-ஆம் தேதியன்று சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெறுங்குவதைத் தொடர்ந்து தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் கண்காணிப்புக் குழுவினர் கூடுதல் கவனத்துடன் பணியாற்றிடவேண்டும். வாகன தணிக்கையின்போது எவ்வித பாகுபாடின்றி இரு சக்கர வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களையும் சோதனை செய்திட வேண்டும். வாகன தணிக்கையினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்திட வேண்டும்.

தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் கண்காணிப்புக் குழுவினர்களுக்கு தேர்தல் முறைகேடுகள் தொடர்பான புகார்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்படும். இத்தகைய சூழ்நிலையில் கண்காணிப்புக் குழுவினர்களை திசைதிருப்புவதற்காக குறிப்பிட்ட சில நபர்கள் போலியான புகார்களை தெரிவித்து குழப்பம் ஏற்படுத்தலாம். கண்காணிப்புக் குழுவினர் இத்தகைய சூழ்நிலைகளை ஆராய்ந்து விழிப்புடன் பணியாற்றி தங்களுக்கு வரும் புகார்களின்மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் குறிப்பிட்ட பகுதிகளில் வாக்காளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக பணம் பதிக்கிவைக்கப்பட்டுள்ளதாக புகார்கள் வரும் பட்சத்தில் உடனடியாக வருமான வரித்துறை அலுவலர்களிடத்திலும் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்களிடத்திலும் தகவல் தெரிவித்து விரைந்து செயலாற்றிட வேண்டும். தேர்தல் வாக்குப்பதிவிற்கு வெகு சில நாட்களே உள்ள காலகட்டமாதலால் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் 24 மணி நேரமும் தொடர்ந்து விழிப்புடன் பணியாற்றி எவ்வித தேர்தல் முறைகேடுகளும் நடைபெறாமல் தடுத்திட வேண்டுமென தேர்தல் பொது பார்வையாளர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் திரு.வி.இராஜசேகர், டாக்டர் பிரதாப் நாராயணசர்மா, திரு.ஜித்தேந்திராசிங், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், வருமான வரித்துறை துணை ஆணையர் திரு.மைக்கல் ஜெரால்டு, சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (பரமக்குடி), வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ராமையா (முதுகுளத்தூர்) உட்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**